**தினமணி (09.02.2025)**

# கல்லூரியில் தேசிய மகளிர் தினவிழா

## டிஎன்பிஎல் ரூ.50 ஆயிரம் நிதியுதவி

**கரூர், பிப்.8:** புகழூர் டிஎன்பிஎல் ஆலை சார்பில் கரூர் தாந்தோன்றிமலை அரசு கலைக்கல்லூரியில் தேசிய மகளிர் தினவிழா நடத்துவதற்காக நிதியுதவி வியாழக்கிழமை வழங்கப்பட்டது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கரூர் தாந்தோன்றிமலையில் உள்ள அரசு கலைக் கல்லூரியில் தேசிய மகளிர் தின விழா நடத்துவதற்கு நன்கொடையாக ரூ.50 ஆயிரம் மற்றும் ஆலை அருகே உள்ள முத்துராஜபுரம், பெரியவள்ளிபாளையம் கிராமங்களின் கோயில்களை புனரமைக்க ரூ.50 ஆயிரம் வழங்கும் நிகழ்ச்சி ஆலை வளாகத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது.

இதில், ஆலையின் பொதுமேலாளர் (மனிதவளம்) கே.கலைச்செல்வன், அரசுக் கலைக்கல்லூரி முதல்வர்(பொறுப்பு) சா.சுதாவிடம் ரூ.50ஆயிரத்துக்கான காசோலையையும் மற்றும் கோயில் திருப்பணிக்குழுவினரிடம் ரூ.50 ஆயிரத்துக்கானகாசோலையையும் வழங்கினார். நிகழ்ச்சியில் ஆலை அதிகாரிகள் பங்கேற்றனர்.

682

**மாலை மலர் 07.02.2025**



தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சார்பில் தான்தோன்றி மலை கலைக்கல்லூரி முதல்வர் சுதாவிடம் ரூ 50 ஆயிரத்திற்கான காசோலையை காகித நிறுவனத்தின் பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன் வழங்கிய போது எடுத்த படம்.

### புகளூர் காகித ஆலை நிறுவனத்தின் சார்பில்

# ரூ.1 லட்சத்திற்கான காசோலை வழங்கும் நிகழ்ச்சி

வேலாயுதம்பாளையம், பிப்.7—

கரூர் மாவட்டம் புகளூர் காகிதபுரத்தில் உள்ள தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் காகித ஆலையைச் சுற்றி அமைந்துள்ள புகழூர் நகராட்சி, புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி மற்றும் திருக்காடுதுறை, வேட்டமங்கலம், புன்னம், கோம்புபாளையம், ந.புகளூர் ஆகிய ஊராட்சி பகுதிகளின் கல்வி வளர்ச்சிக்கும், உட்கட்டமைப்பினை மேம்படுத்திடவும், பழங்கால கோவில்களை புனரமைப்பதற்கும் பல்வேறு உதவிகளை வழங்கி வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, கரூர் மாவட்டம், தாந்தோன்றிமலையில் உள்ள அரசு கலைக் கல்லூரியில் தேசிய மகளிர் தின விழா நடத்துவதற்கு நன்கொடையாக ரூ.50 ஆயிரத்திற்கான காசோலையை தான்தோன்றிமலை அரசு கலைக் கல்லூரி முதல்வர் சுதா விடமும், அதேபோல் காகித ஆலையைச் சுற்றியுள்ள முத்துராஜபுரம் மற்றும் பெரியவள்ளிபாளையம் ஆகிய கிராமங்களில் உள்ள கோவில்களை புனரமைப்பதற்கு நன்கொடையாக ரூ.50 ஆயிரத்திற்கான காசோலைகளை அந்தந்த கோவில் திருப்பணிக்குழு உறுப்பினர்களிடமும் காகித நிறுவனத்தின் பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன் வழங்கினார்.

**தினமலர் (09.02.2025)**



கரூர் அரசு கலை கல்லூரியில் தேசிய மகளிர் தின விழா நடத்த ரூ.50 ஆயிரத்திற்கான காசோலையை கல்லூரி முதல்வர் சுதாவிடம் புகழூர் காகித ஆலை சார்பில் அதன் பொது மேலாளர் கலைச்செல்வன் வழங்கினார்.

# காகித நிறுவனம் நிதியுதவி வழங்கல்

**வேலாயுதம்பாளையம்:** தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் தனது சமூக மேம்பாட்டு திட்டத்தின் கீழ் காகித ஆலையைச் சுற்றி அமைந்துள்ள புகழூர் நகராட்சி, புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி மற்றும் திருக்காடுதுறை, வேட்டமங்கலம், புன்னம், கோம்பு பாளையம், ந.புகளூர் ஆகிய ஊராட்சி பகுதிகளின் கல்வி வளர்ச்சிக்கும், உட்கட்டமைப்பை மேம்படுத் திடவும், பழங்கால கோயில்களை புனரமைப்பதற்கும் பல்வேறு உதவிகளை வழங்கி வருகிறது. அதன் ஒரு பகுதியாக, கரூர் அரசு கலைக் கல்லூரியில் தேசிய மகளிர் தின விழா நடத்துவதற்கு நன்கொடையாக ரூ.50 ஆயிரம் நிதி வழங்கி உள்ளது.

அதேபோல் காகித ஆலையைச் சுற்றியுள்ள முத்துராஜபுரம் மற்றும் பெரியவள்ளிபாளையம் ஆகிய கிராமங்களில் உள்ள கோயில்களை புனரமைப்பதற்கு நன்கொடையாக மொத்தம் ரூ.50 ஆயிரம் வழங்கி உள்ளது. மொத்தம் ரூ.ஒரு லட்சத்திற்கான காசோலையை காகித ஆலை பொது மேலாளர் (மனித வளம்) கலைச்செல்வன் கலைக் கல்லூரி முதல்வர் (பொ) சுதா மற்றும் கோயில் திருப்பணிக்குழு உறுப்பினர்கள் ஆகியோரிடம் வழங்கினார்.